**செய்தி வெளியீடு எண்: 17** **நாள்:09.01.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 8.1.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறையின் சார்பில் மாநில ஆள்சேர்ப்பு நிலையத்தின் மூலமாக 293 உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 9 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில அளவிலான தலைமை கூட்டுறவு சங்கங்களில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு மாநில ஆள்சேர்ப்பு நிலையத்தால் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாக பணியாளர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். அந்த வகையில், மாநில ஆள்சேர்ப்பு நிலையத்தின் மூலமாக தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் காலியாகவுள்ள 175 உதவியாளர் பணியிடங்கள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் காலியாகவுள்ள 57 உதவியாளர் பணியிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தில் காலியாகவுள்ள 53 உதவியாளர் பணியிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் காலியாகவுள்ள 6 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தில் காலியாகவுள்ள 2 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், என மொத்தம் 293 உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு, தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு, தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர். இளங்கோவன், துணைத் தலைவர் திரு.எஸ். ஆசைமணி, மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.ஜி. சக்திசரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9